ASTROBHAVA

SACRED HYMN · TAMIL WITH MEANING

Arunachala Akshara Manamalai

Sri Ramana Maharshi

THE COMPLETE HYMN · TAMIL

The invocation to Ganapati, the refrain sung after every couplet, and the 108 couplets in the traditional joined Tamil form. The printed closing line is given at the end.

KAPPU

அருணாசல வரற்கேற்ற வக்ஷரமண மாலைசாற்றக்
கருணாகர கணபதியே கரமருளிக் காப்பாயே

Merciful Ganapati, give me your hand and protect me, so that I may offer this wedding garland of letters worthy of Arunachala, the bridegroom.

REFRAIN

அருணாசல சிவ அருணாசல சிவ
அருணாசல சிவ அருணாசலா
அருணாசல சிவ அருணாசல சிவ
அருணாசல சிவ அருணாசலா

A chant of the name: Arunachala Shiva, Arunachala Shiva, Arunachala Shiva, O Arunachala. It is sung before the first verse, after every verse and at the end.

VERSE 1

அருணா சலமென வகமே நினைப்பவ
ரகத்தைவே ரறுப்பா யருணாசலா

Arunachala, you root out the ego of those who think of you in the heart as Arunachala.

VERSE 2

அழகுசுந் தரம்போ லகமும் நீயுமுற்
றபின்னமா யிருப்போ மருணாசலா

Let you and me be one and undivided, like the words azhagu and sundaram, which both mean beauty (and were also the names of the poet's mother and father), Arunachala.

VERSE 3

அகம்புகுந் தீர்த்துன் னககுகை சிறையா
யமர்வித்த தென்கொ லருணாசலா

You entered my home, drew me out and kept me captive in the cave of your heart; what is this, Arunachala?

VERSE 4

ஆருக் காவெனை யாண்டனை யகற்றிடி
லகிலம் பழித்திடு மருணாசலா

For whose sake did you take me as your own? If you now cast me off, the whole world will blame you, Arunachala.

VERSE 5

இப்பழி தப்புனை யேனினைப் பித்தா
யினியார் விடுவா ரருணாசலா

Escape this blame. Why did you make me think of you? Now who can let the other go, Arunachala?

VERSE 6

ஈன்றிடு மன்னையிற் பெரிதருள் புரிவோ
யிதுவோ வுனதரு ளருணாசலா

You who show more grace than the mother who bore me, is this your grace, Arunachala?

VERSE 7

உனையே மாற்றி யோடா துளத்தின்மே
லுறுதியா யிருப்பா யருணாசலா

Stay firmly on my heart, so that the mind does not trick you and run off, Arunachala.

VERSE 8

ஊர்சுற் றுளம்விடா துனைக்கண் டடங்கிட
வுன்னழ கைக்காட் டருணாசலா

Show me your beauty, so that my mind, which roams about the town, may see you and become still, Arunachala.

VERSE 9

எனையழித் திப்போ தெனைக்கல வாவிடி
லிதுவோ வாண்மை யருணாசலா

If you do not destroy me and unite with me now, is this your manliness, Arunachala?

VERSE 10

ஏனிந்த வுறக்க மெனைப்பிற ரிழுக்க
விதுவுனக் கழகோ வருணாசலா

Why this sleep of yours, while others drag me away? Does it become you, Arunachala?

VERSE 11

ஐம்புலக் கள்வ ரகத்தினிற் புகும்போ
தகத்தினீ யிலையோ வருணாசலா

When the five thieves, the senses, break into my heart, are you not there in the heart, Arunachala?

VERSE 12

ஒருவனா முன்னை யொளித்தெவர் வருவா
ருன்சூ தேயிது வருணாசலா

You are the One alone; who could slip in unseen by you? This is your own trick, Arunachala.

VERSE 13

ஓங்கா ரப்பொரு ளொப்புயர் வில்லோ
யுனையா ரறிவா ரருணாசலா

You who are the meaning of Om, with none equal or higher, who can know you, Arunachala?

VERSE 14

ஔவைபோ லெனக்குன் னருளைத் தந்தெனை
யாளுவ துன்கட னருணாசலா

Like a mother, it is your duty to give me your grace and care for me, Arunachala.

VERSE 15

கண்ணுக்குக் கண்ணாய்க் கண்ணின்றிக் காணுனைக்
காணுவ தெவர்பா ரருணாசலா

You are the eye of the eye and see without eyes; who can see you? Look upon me, Arunachala.

VERSE 16

காந்த மிரும்புபோற் கவர்ந்தெனை விடாமற்
கலந்தெனோ டிருப்பா யருணாசலா

As a magnet draws iron, draw me to you and, never letting go, stay one with me, Arunachala.

VERSE 17

கிரியுரு வாகிய கிருபைக் கடலே
கிருபைகூர்ந் தருளுவா யருணாசலா

Ocean of compassion that has taken the form of a hill, take pity on me and grant grace, Arunachala.

VERSE 18

கீழ்மே லெங்குங் கிளரொளி மணியென்
கீழ்மையைப் பாழ்செய் யருணாசலா

Gem whose light shines everywhere, below and above, destroy my baseness, Arunachala.

VERSE 19

குற்றமுற் றறுத்தெனைக் குணமாய்ப் பணித்தாள்
குருவுரு வாயொளி ரருணாசலா

Cutting away all my faults, you made me good and took me as yours; you shine in the form of the Guru, Arunachala.

VERSE 20

கூர்வாட் கண்ணியர் கொடுமையிற் படாதருள்
கூர்ந்தெனைச் சேர்ந்தரு ளருணாசலா

Grant that I do not fall into the cruelty of women with sword-sharp eyes; have mercy and unite with me, Arunachala.

VERSE 21

கெஞ்சியும் வஞ்சியாய்க் கொஞ்சமு மிரங்கிலை
யஞ்சலென் றேயரு ளருணாசலா

Though I plead, you deceiver, you do not soften even a little; say 'Do not fear' and grant grace, Arunachala.

VERSE 22

கேளா தளிக்குமுன் கேடில் புகழைக்
கேடுசெய் யாதரு ளருணாசலா

You give without being asked; do not spoil that spotless fame of yours, grant grace, Arunachala.

VERSE 23

கையினிற் கனியுன் மெய்ரசங் கொண்டுவ
கைவெறி கொளவரு ளருணாசலா

Let me drink the true essence of you, the fruit now in my hand, and grow wild with joy, Arunachala.

VERSE 24

கொடியிட் டடியரைக் கொல்லுனைக் கட்டிக்
கொண்டெனன் வாழ்வே னருணாசலா

You raise your flag and slay your devotees; having embraced you, how shall I live, Arunachala?

VERSE 25

கோபமில் குணத்தோய் குறியா யெனைக்கொளக்
குறையென் செய்தே னருணாசலா

You whose nature knows no anger, what wrong did I do, that you chose me as your target, Arunachala?

VERSE 26

கௌதமர் போற்றுங் கருணைமா மலையே
கடைக்கணித் தாள்வா யருணாசலா

Great hill of compassion praised by the sage Gautama, rule me with your gracious glance, Arunachala.

VERSE 27

சகலமும் விழுங்குங் கதிரொளி யினமன
சலச மலர்த்தியி டருணாசலா

Sun whose rays swallow everything, open the lotus of my mind, Arunachala.

VERSE 28

சாப்பா டுன்னைச் சார்ந்துண வாயான்
சாந்தமாய்ப் போவ னருணாசலா

I came to you to have you as my food; I will become your food and so pass into peace, Arunachala.

VERSE 29

சித்தங் குளிரக்கதி ரத்தம்வைத் தமுதவா
யைத்திற வருண்மதி யருணாசலா

Moon of grace, cool my mind with your rays and open the mouth of the nectar within, Arunachala.

VERSE 30

சீரை யழித்துநிர் வாணமாச் செய்தருட்
சீரை யளித்தரு ளருணாசலா

Strip away my clothing (and my pride), leave me bare, and give me the garment of your grace, Arunachala.

VERSE 31

சுகக்கடல் பொங்கச் சொல்லுணர் வடங்கச்
சும்மா பொருந்திடங் கருணாசலா

Rest there in stillness, so that the ocean of bliss may surge and speech and thought subside, Arunachala.

VERSE 32

சூதுசெய் தென்னைச் சோதியா தினியுன்
சோதி யுருக்காட் டருணாசலா

Do not test me with tricks any more; show me your form of light, Arunachala.

VERSE 33

செப்படி வித்தைகற் றிப்படி மயக்குவிட்
டுருப்படு வித்தைகாட் டருணாசலா

Give up this bewitching, as if you had learnt a conjurer's art, and show me the knowledge that saves, Arunachala.

VERSE 34

சேரா யெனின்மெய் நீரா யுருகிக்கண்
ணீராற் றழிவே னருணாசலா

If you do not join me, my body will melt into water and I will perish in a river of tears, Arunachala.

VERSE 35

சையெனத் தள்ளிற் செய்வினை சுடுமலா
லுய்வகை யேதுரை யருணாசலா

If you push me away in disgust, my past deeds will burn me; tell me, what other way of rescue is there, Arunachala?

VERSE 36

சொல்லாது சொலிநீ சொல்லற நில்லென்று
சும்மா விருந்தா யருணாசலா

Saying without words, 'Be still, free of speech', you yourself stayed silent, Arunachala.

VERSE 37

சோம்பியாய்ச் சும்மா சுகமுண் டுறங்கிடிற்
சொல்வே றென்கதி யருணாசலா

If I stay idle and still, taking bliss and resting in sleep, tell me, what other goal is there for me, Arunachala?

VERSE 38

சௌரியங் காட்டினை சழக்கற்ற தென்றே
சலியா திருந்தா யருணாசலா

You showed your valour, and saying 'the falsehood is gone', you remained unmoved, Arunachala.

VERSE 39

ஞமலியிற் கேடா நானென் னுறுதியா
னாடிநின் னுறுவே னருணாசலா

Am I worse than a dog? With firm resolve I will seek you and reach you, Arunachala.

VERSE 40

ஞானமில் லாதுன் னாசையாற் றளர்வற
ஞானந் தெரித்தரு ளருணாசலா

I have no knowledge, and my longing for you wears me down; so that I do not falter, make true knowledge clear to me, Arunachala.

VERSE 41

ஞிமிறுபோ னீயு மலர்ந்திலை யென்றே
நேர்நின் றனையென் னருணாசலா

Like a bee, you stood before me saying that I had not yet blossomed; what is this, Arunachala?

VERSE 42

தத்துவந் தெரியா தத்தனை யுற்றாய்
தத்துவ மிதுவென் னருணாசலா

Though I did not know the truth, you came and made me yours; what is the truth of this, Arunachala?

VERSE 43

தானே தானே தத்துவ மிதனைத்
தானே காட்டுவா யருணாசலா

You alone are the truth, your own self; show this truth to me yourself, Arunachala.

VERSE 44

திரும்பி யகந்தனைத் தினமகக் கண்காண்
டெரியுமென் றனையென் னருணாசலா

You told me, 'Turn inward and look at yourself daily with the inner eye, and it will become clear'; what is this, Arunachala?

VERSE 45

தீரமி லகத்திற் றேடியுந் தனையான்
றிரும்பவுற் றேனரு ளருணாசலா

Searching for myself within the boundless heart, I came back and found you; grant grace, Arunachala.

VERSE 46

துப்பறி வில்லா விப்பிறப் பென்பய
னொப்பிட வாயே னருணாசலா

What is the use of this birth, lacking real discernment? Come and make it worthwhile, Arunachala.

VERSE 47

தூய்மன மொழியர் தோயுமுன் மெய்யகந்
தோயவே யருளென் னருணாசலா

Grant that I too may be immersed in your true being, in which those pure in mind and speech are immersed, Arunachala.

VERSE 48

தெய்வமென் றுன்னைச் சாரவே யென்னைச்
சேர வொழித்தா யருணாசலா

When I came to you as God, you destroyed me completely, Arunachala.

VERSE 49

தேடா துற்றநற் றிருவரு ணிதியகத்
தியக்கந் தீர்த்தரு ளருணாசலா

Treasure of grace that came to me without my seeking, clear away the confusion of my mind, Arunachala.

VERSE 50

தைரிய மோடுமுன் மெய்யக நாடயான்
றட்டழிந் தேனரு ளருணாசலா

When I set out boldly to seek your true being, I was shaken and lost; grant grace, Arunachala.

VERSE 51

தொட்டருட் கைமெய் கட்டிடா யெனிலியா
னட்டமா வேனரு ளருணாசலா

If you do not touch me with your hand of grace and embrace me, I am lost; grant grace, Arunachala.

VERSE 52

தோடமி னீயகத் தோடொன்றி யென்றுஞ்சந்
தோடமொன் றிடவரு ளருணாசலா

Faultless one, become one with me within, so that joy may always remain; grant grace, Arunachala.

VERSE 53

நகைக்கிட மிலைநின் னாடிய வெனையரு
ணகையிட்டுப் பார்நீ யருணாசலா

This is no time for mocking me, who sought you; look at me with a gracious smile, Arunachala.

VERSE 54

நாணிலை நாடிட நானா யொன்றிநீ
தாணுவா நின்றனை யருணாசலா

Have you no shame? When I sought you, you became one with me as myself and stood motionless like a pillar, Arunachala.

VERSE 55

நின்னெரி யெரித்தெனை நீறாக் கிடுமுன்
னின்னருண் மழைபொழி யருணாசலா

Before your fire burns me to ashes, pour down the rain of your grace, Arunachala.

VERSE 56

நீநா னறப்புலி நிதங்களி மயமா
நின்றிடு நிலையரு ளருணாசலா

Grant the state in which, in close embrace, 'you' and 'I' vanish and I remain forever in bliss, Arunachala.

VERSE 57

நுண்ணுரு வுனையான் விண்ணுரு நண்ணிட
வெண்ணலை யிறுமென் றருணாசலா

Subtle one, whose form is space, when will the waves of thought end, so that I may reach you, Arunachala?

VERSE 58

நூலறி வறியாப் பேதைய னென்றன்
மாலறி வறுத்தரு ளருணாசலா

I am a simple soul who knows nothing of the scriptures; cut away my deluded knowledge and grant grace, Arunachala.

VERSE 59

நெக்குநெக் குருகியான் புக்கிட வுனைப்புக
னக்கனா நின்றனை யருணாசலா

As I melted and melted and came to take refuge in you, you stood there naked, Arunachala.

VERSE 60

நேசமி லெனக்குன் னாசையைக் காட்டிநீ
மோசஞ் செயாதரு ளருணாசலா

You showed your love to me, who had none for you; do not deceive me now, grant grace, Arunachala.

VERSE 61

நைந்தழி கனியா னலனிலை பதத்தி
னாடியுட் கொள்நல மருணாசலா

A fruit gone soft and rotten is of no use; take me while I am ripe and enjoy what is good, Arunachala.

VERSE 62

நொந்திடா துன்றனைத் தந்தெனைக் கொண்டிலை
யந்தக னீயெனக் கருணாசலா

Without making me suffer, you gave yourself and took me; you are death itself to me, Arunachala.

VERSE 63

நோக்கியே கருதிமெய் தாக்கியே பக்குவ
மாக்கிநீ யாண்டரு ளருணாசலா

Looking at me, thinking of me and touching me, make me ripe and rule over me, Arunachala.

VERSE 64

பற்றிமால் விடந்தலை யுற்றிறு முனமருள்
பற்றிட வருள்புரி யருணாசலா

Before the poison of delusion takes hold, rises to my head and kills me, let your grace take hold of me, Arunachala.

VERSE 65

பார்த்தருண் மாலறப் பார்த்திலை யெனினருள்
பாருனக் கார்சொல்வ ரருணாசலா

Look at me with grace so that delusion ends; if you do not look, who will speak to you for me, Arunachala?

VERSE 66

பித்துவிட் டுனைநேர் பித்தனாக் கினையருள்
பித்தந் தெளிமருந் தருணாசலா

You freed me from madness and made me mad for you; grant the medicine that cures this madness, Arunachala.

VERSE 67

பீதியி லுனைச்சார் பீதியி லெனைச்சேர்
பீதியுன் றனக்கே னருணாசலா

I came to you, the fearless one, without fear; why should you fear to unite with me, Arunachala?

VERSE 68

புல்லறி வேதுரை நல்லறி வேதுரை
புல்லிட வேயரு ளருணாசலா

Tell me what is petty knowledge and what is true knowledge, and grant that I may embrace it, Arunachala.

VERSE 69

பூமண மாமனம் பூரண மணங்கொளப்
பூரண மணமரு ளருணாசலா

So that my mind, scented like a flower, may take on the whole fragrance, grant me complete union, Arunachala.

VERSE 70

பெயர்நினைத் திடவே பிடித்திழுத் தனையுன்
பெருமையா றறிவா ரருணாசலா

As soon as I thought of your name, you seized me and drew me in; who can know your greatness, Arunachala?

VERSE 71

பேய்த்தனம் விடவிடாப் பேயாப் பிடித்தெனைப்
பேயனாக் கினையென் னருணாசலா

To rid me of my madness, you seized me like a spirit that never lets go and made me mad for you; what is this, Arunachala?

VERSE 72

பைங்கொடி யாநான் பற்றின்றி வாடாமற்
பற்றுக்கோ டாய்க்கா வருணாசலா

So that I do not wither like a tender creeper with nothing to cling to, be my support and protect me, Arunachala.

VERSE 73

பொடியான் மயக்கியென் போதத்தைப் பறித்துன்
போதத்தைக் காட்டினை யருணாசலா

Bewitching me as if with a powder, you stole away my awareness and showed me your own, Arunachala.

VERSE 74

போக்கும் வரவுமில் பொதுவெளி யினிலருட்
போராட் டங்காட் டருணாசலா

In the open space where there is no coming or going, show me the struggle of grace, Arunachala.

VERSE 75

பௌதிக மாமுடற் பற்றற்று நாளுமுன்
பவிசுகண் டுறவரு ளருணாசலா

Grant that, free from attachment to this physical body, I may see your splendour every day and become one with you, Arunachala.

VERSE 76

மலைமருந் திடநீ மலைத்திட வோவருண்
மலைமருந் தாயொளி ரருணாசலா

Once you have given the medicine for bewilderment, should I still be bewildered? You shine as the healing medicine in the form of a hill, Arunachala.

VERSE 77

மானங்கொண் டுறுபவர் மானத்தை யழித்தபி
மானமில் லாதொளி ரருணாசலா

You destroy the pride of those who come to you proudly, and then shine free of all pride, Arunachala.

VERSE 78

மிஞ்சிடிற் கெஞ்சிடுங் கொஞ்ச வறிவனியான்
வஞ்சியா தருளெனை யருணாசலா

I am of little sense, one who pleads when others turn harsh; do not deceive me, grant me grace, Arunachala.

VERSE 79

மீகாம னில்லாமன் மாகாற் றலைகல
மாகாமற் காத்தரு ளருணாசலா

Like a ship in a great storm with no helmsman, keep me from being wrecked, Arunachala.

VERSE 80

முடியடி காணா முடிவிடுத் தனைநேர்
முடிவிடக் கடனிலை யருணாசலா

You whose top and foot could not be found, you began to undo the knot; is it not your duty to undo it to the end, Arunachala?

VERSE 81

மூக்கிலன் முன்காட்டு முகுரமா காதெனைத்
தூக்கி யணைந்தரு ளருணாசலா

Do not be like a mirror held up before a man without a nose; lift me up and embrace me, Arunachala.

VERSE 82

மெய்யகத் தின்மன மென்மல ரணையினா
மெய்கலந் திடவரு ளருணாசலா

In the house of truth, on the soft flower bed of the mind, grant that we may become one in truth, Arunachala.

VERSE 83

மேன்மேற் றாழ்ந்திடு மெல்லியர்ச் சேர்ந்துநீ
மேன்மையுற் றனையென் னருணாசலா

Keeping company with the humble who sink ever lower, you yourself became exalted; what is this, Arunachala?

VERSE 84

மைமய னீத்தருண் மையினா லுனதுண்
மைவச மாக்கினை யருணாசலா

Removing the darkness of delusion with the eye-salve of grace, you brought me under the sway of your truth, Arunachala.

VERSE 85

மொட்டை யடித்தெனை வெட்ட வெளியினீ
நட்டமா டினையென் னருணாசலா

Shaving me bare, you danced in the wide open space; what is this, Arunachala?

VERSE 86

மோகந் தவிர்த்துன் மோகமா வைத்துமென்
மோகந்தீ ராயென் னருணாசலா

You ended my infatuation and made me infatuated with you; why do you not end this infatuation, Arunachala?

VERSE 87

மௌனியாய்க் கற்போன் மலரா திருந்தான்
மௌனமி தாமோ வருணாசலா

If one stays silent like a stone and does not blossom, is that true silence, Arunachala?

VERSE 88

யவனென் வாயின் மண்ணினை யட்டி
யென்பிழைப் பொழித்த தருணாசலா

Who was it that threw earth in my mouth and ended my livelihood, Arunachala?

VERSE 89

யாருமறி யாதென் மதியினை மருட்டி
யெவர்கொளை கொண்ட தருணாசலா

Who was it that confused my mind without anyone knowing and robbed me, Arunachala?

VERSE 90

ரமணனென் றுரைத்தேன் ரோசங் கொளாதெனை
ரமித்திடச் செயவா வருணாசலா

I called you Ramana; do not take offence, come and make me delight in you, Arunachala.

VERSE 91

ராப்பக லில்லா வெறுவெளி வீட்டில்
ரமித்திடு வோம்வா வருணாசலா

Come, let us delight together in the empty, open home where there is neither night nor day, Arunachala.

VERSE 92

லட்சியம் வைத்தரு ளஸ்திரம் விட்டெனைப்
பட்சித்தாய் பிராணனோ டருணாசலா

Taking aim, you let loose the arrow of grace and devoured me alive, Arunachala.

VERSE 93

லாபநீ யிகபர லாபமி லெனையுற்று
லாபமென் னுற்றனை யருணாசலா

You are the true gain; what did you gain by coming to me, who have no gain in this world or the next, Arunachala?

VERSE 94

வரும்படி சொலிலை வந்தென் படியள
வருந்திடுன் றலைவிதி யருணாசலா

You did not tell me to come; I came of myself, so measure out my portion; bearing it is now your lot, Arunachala.

VERSE 95

வாவென் றகம்புக்குன் வாழ்வரு ளன்றேயென்
வாழ்விழந் தேனரு ளருணாசலா

The day you said 'Come', entered my heart and gave me your life, I lost my own life; grant grace, Arunachala.

VERSE 96

விட்டிடிற் கட்டமாம் விட்டிடா துனையுயிர்
விட்டிட வருள்புரி யருணாசலா

If you let me go, it will be misery; grant that I may give up my life without letting go of you, Arunachala.

VERSE 97

வீடுவிட் டீர்த்துள வீடுபுக்குப் பையவுன்
வீடுகாட் டினையரு ளருணாசலா

You drew me out of my house, entered the house of my heart, and gently showed me your own home (liberation); grant grace, Arunachala.

VERSE 98

வெளிவிட்டே னுன்செயல் வெறுத்திடா துன்னருள்
வெளிவிட் டெனைக்கா வருணாசலா

I have made your doings known; do not be displeased, but pour out your grace and protect me, Arunachala.

VERSE 99

வேதாந் தத்தே வேறற விளங்கும்
வேதப் பொருளரு ளருணாசலா

Grant me the meaning of the Vedas, which shines in Vedanta free of all difference, Arunachala.

VERSE 100

வைதலை வாழ்த்தா வைத்தருட் குடியா
வைத்தெனை விடாதரு ளருணாசலா

Take my scolding as praise, keep me as one who dwells in your grace, and never let me go, Arunachala.

VERSE 101

அம்புவி லாலிபோ லன்புரு வுனிலெனை
யன்பாக் கரைத்தரு ளருணாசலா

Like a hailstone in water, melt me as love into you, whose form is love, Arunachala.

VERSE 102

அருணையென் றெண்ணயா னருட்கண்ணி பட்டேனுன்
னருள்வலை தப்புமோ வருணாசலா

When I merely thought 'Arunai', I was caught in the snare of your grace; can anyone escape the net of your grace, Arunachala?

VERSE 103

சிந்தித் தருட்படச் சிலந்திபோற் கட்டிச்
சிறையிட் டுண்டனை யருணாசலா

Planning that I be caught in grace, you bound me like a spider, made me your prisoner and devoured me, Arunachala.

VERSE 104

அன்பொடுன் னாமங்கே ளன்பர்த மன்பருக்
கன்பனா யிடவரு ளருணாசலா

Grant that I may be a lover of the devotees of those who hear your name with love, Arunachala.

VERSE 105

என்போலுந் தீனரை யின்புறக் காத்துநீ
யெந்நாளும் வாழ்ந்தரு ளருணாசலா

Protect the humble like me so that they rejoice, and may you live and grant grace for all time, Arunachala.

VERSE 106

என்புரு கன்பர்த மின்சொற்கொள் செவியுமென்
புன்மொழி கொளவரு ளருணாசலா

Grant that your ears, which take in the sweet words of devotees whose very bones melt with love, may also take in my poor words, Arunachala.

VERSE 107

பொறுமையாம் பூதர புன்சொலை நன்சொலாப்
பொறுத்தரு ளிஷ்டம்பின் னருணாசலா

Mountain of patience, bear with my poor words as if they were good ones, and then grant grace as you please, Arunachala.

VERSE 108

மாலை யளித்தரு ணாசல ரமணவென்
மாலை யணிந்தரு ளருணாசலா

Arunachala Ramana, you gave me a garland; now wear my garland and grant grace, Arunachala.

CLOSING

அருணா சலம்வாழி யன்பர் களும்வாழி
அக்ஷர மணமாலை வாழி

Thus ends the hymn with a blessing: long live Arunachala, long live the devotees, long live this Akshara Manamalai.

Read it on its page

The Arunachala Akshara Manamalai with its meaning, how and when it is recited, and the same text in five more scripts: astrobhava.com/mantra/arunachala-akshara-manamalai/



PERFORMED FOR YOU

The Rudra Homam, in your name

At our Yagna Ashram, telecast live · astrobhava.com/product/rudra-homa/

Book →

AstroBhava · www.astrobhava.com · support@astrobhava.com · +91 96295 55442
An initiative of Vedhon Management Consultants (OPC) Pvt Ltd, Pollachi